மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய நாட்டில் எங்கும் இல்லாத அளவுக்கு நம்முடைய தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஒரு திட்டத்தை வைத்திருக்கிறார்கள், தனியாரை ஊக்குவிக்கிற வகையில் சமூக நலக் காடுகள் வளர்ப்பதற்கு வருகிற ஆண்டில் இதற்கான திட்டப் பணியை நாங்கள் துவக்க இருக்கிறோம்,

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு, கு, லாரன்ஸ்,

திரு, கு, லாரன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சமூக நலக்காடுகள் வளர்ப்புத் திட்டத்தை சில இன்ஸ்டிடியூஷன்ஸ் அடிப்படையில் நிறைவேற்றுகிற நோக்கத்தோடு கல்லூரிகள், தமிழகத்திலே இருக்கிற பள்ளிகள் போன்ற இடங்களிலும், மற்றும் தொழிற்சாலைகள் அமைந்திருக்கிற இடங்களிலும் குறிப்பாக இந்த சமூக நலக்காடுகள் வளர்க்க இந்த அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்னுரிமை வழங்கப்படும்,

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண், 226— திரு. எஸ். எம். துரை. மாண்புமிகு கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர்,

226—

கைத்தறி நெசவாளர்களுக்கு தறி நெசவுக்கூடம்,

*3503 திரு. எஸ். எம். துரை :

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா

(அ) கைத்தறி நெசவாளர்களுக்கு தறிநெசவுக்கூடம் இணைந்து வழங்கும் திட்டத்தில் அதிகமாகக் கைத்தறிகள் உள்ள சின்னாளப்பட்டிக்கு முன்னுரிமை கொடுக்க அரசு முன்வருமா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

1992 மார்ச் 16]

(அ) மற்றும் (ஆ) கைத்தறி நெசவாளர்களுக்கு சின்னாளப் பட்டியில் 165 தறிக்கூடத்துடன் இணைந்த வீடுகள் கீழ்க்கண்ட நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் மூலம் தற்போது கட்டப்பட்டு வருகிறது,

1, காந்திஜி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம்	..	52 வீடுகள்
2, கலைமகள் நெசவாளர் கூட்டுறவுச் சங்கம்	..	56 வீடுகள்
3, அஞ்சுகம் நெசவாளர் கூட்டுறவுச் சங்கம்	..	57 வீடுகள்
ஒட்டுமொத்தமாக வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன.	..	165

திரு. எஸ். எம். துரை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறிய பதிலுக்கு நன்றியைக் கூறிக்கொள்கிறேன், கேளுங்கள் தரப்படும். தட்டுங்கள் திறக்கப்படும் என்று இயேசுபிரான் கூறியுள்ளார், மாண்புமிகு தமிழக முதல்வர், இதய தெய்வம், டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியில் கேட்பவர்களுக்கு இல்லையென்ற சொல்லே இல்லாத நிலையில் 5,000 விசைத் தறிகள் கைத்தறி நெசவாளர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளன என்று நம்முடைய பட்ஜெட்டில் கூறப்பட்டிருக்கிறது, அதன் படி கைத்தறி நெசவாளர்கள், கைத்தறியை நம்பியுள்ளவர் கள் அதிகமுள்ள என்னுடைய சொந்த ஊரான சின்னாளப் பட்டிக்கு விசைத்தறிகள் அதிக அளவுக்கு ஒதுக்கித்தர அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வி வீடு கட்டுகிற திட்டத்தை பற்றியதாகும், இப்போது சின்னாளம்பட்டியில் விசைத் தறிகள் தரப்படுமா என்று கேள்வி கேட்டிருக்கிறார்கள்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்த ஊருக்குப் பெயர் சின்னாளப்பட்டி, சின்னாளம்பட்டி அல்ல,

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே சின்னாளப்பட்டித் தமிழகத்தில்வீடு கட்டுகிறத் திட்டத்தின்கீழ் நடப்பாண்டில் 2000 வீடுகள் கட்டவிருக்கிறோம், அதன்கீழ் கேள்வி வருமானால், பதில் அளிக்கலாம், உறுப் பினர் அவர்களுக்கு விசைத்தறிகள் குறித்து கேட்க வேண்டு மென்றால் அதுகுறித்துத் தனிக் கேள்வி போடவும்,